IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE,
TIRUVANNAMALAI.
MCOP No. 397/2022

20.09.2023 – **ம.சா.1 திருமதி. திவ்யா** சத்திய வாக்குமூலத்தின் பேரில் 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:

விபத்தில் எனது கணவர் தான் இறந்தார். விபத்தில் எனது மகன் இறந்தார் என்று சொன்னால் சரியல்ல. எனது கணவர் அடகு கடை வைத்து நடத்தி வந்தார். எனது கணவர் 2018ல் இருந்து அடகு கடை நடத்தி வந்தார். ஒரு வருடத்திற்கு 30 லட்சம் எனது கணவர் வருவாய் ஈட்டி வந்தார். மேற்படி 30 லட்சத்திற்கு வருமான வரி கட்டியுள்ளோமா என்றால் இல்லை. அதேபோல் ஆடிட்டர் மூலம் மேற்சொன்ன 30 லட்சம் வருமானத்தை தனிக்கை செய்தோமா என்றால் இல்லை. நான் ரூபாய் 30 லட்சம் வருமானம் வந்ததாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது கணவர் இருசக்கர வாகனத்தில் விபத்து சமயத்தில் சென்றார். எனது கணவர் விபத்திற்குள்ளான தேதி 16.01.2021 ஆகும். விபத்தானது சுகர்மில் அருகே மயிலாடும்பாறை என்ற இடத்தில் நடந்தது. விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை. நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் இரண்டாவது பத்தியில் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் அனைத்தும் தவறானவை என்றால் சரியல்ல. ஆம்புலன்சில் எனது கணவரை அழைத்து சென்றதை குறித்து எனக்கு நேரடியாக தெரியாது. விபத்து குறித்து நான் தான் புகார் கொடுத்தேன். எனது கணவர் உயிரோடு இருந்தால் அதிக சம்பளத்தில் வேலை கிடைத்திருக்கும் என்று நான் தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அவருக்கு அரசு வேலை கிடைத்த உடன் அடகு கடை என்னிடம் கொடுத்துவிட்டு வேலைக்கு செல்ல போவதாக உயிரோடு இருந்த போது கூறியிருந்தார். மேற்சொன்ன விவரத்தை என்னுடைய மனுவிலும் நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். எனது கணவர் 90 வயது வரை வாழ்வார் என கற்பனையாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஈமக்காரியங்களுக்காக ரூபாய் 50 ஆயிரம் செலவாகியுள்ளது என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடு

தொகை மிக அதிகமானது என்றால் சரியல்ல. எனது கணவரின் பான் புரோக்கர் லைசன்ஸ் ரெனிவல் செய்யப்பட்டது . ஆனால் ரெனிவல் செய்ததற்கான ஆதாரம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். எனது கணவருக்கு இருசக்கர வாகன உரிமம் உள்ளது. ஓட்டுனர் உரிம நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது கணவரின் கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரருக்கு எதிராக இந்த வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.

/ உண்மை நகல் / ஒம்/– P. மதுசூதனன்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருவண்ணாமலை.